பக்கங்கள்: 08 விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 22 செவ்வாய்க்கிழமை 05.05.2020 கதிர் 49

## பாடசாலைகள் திறப்பது குறித்து முடிவு இல்லை

கொழும்பு, மே. 05

பாடசாலைகள் ஜுன் மாதம் முதலாம் திகதி முதல் மீளத் திறக்கப்படும் என வெளியான தகவலில் எந்தவித உண்மையும் இல்லை எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

2

# நாடாளுமன்றக் கலைப்பு உத்தரவுக்கு எதிராக விக்டர் ஐவன் குழு உயர்நீதிமன்றத்தில் வழக்கு

### ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் முன்னிலையாகி வாதிடுவார்

**கொழும்பு, மே. 05**

**கடந்த மார்ச் 2ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த உத்தரவை வெற்றும் வறிதுமானதாக அறிவிக்கும்படி கோரி கொழும்பு உயர்நீதிமன்றத்தில் இன்று அடிப்படை உரிமை மீறலுக்கு எதிரான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.**

**பிரபல ஊடகவியலாளர் விக்டர் ஐவனும் மற்றும் ஏழு பேரும் சேர்ந்து இந்த மனுவை அரசமைப்பின் 126ஆவது பிரிவின் கீழ் தாக்கல் செய்துள்ளனர்.**

**எதிர்மனு தாரர்களாக சட்டமா அதிபர் மற்றும் தேர்தல்கள் ஆணையத்தின் மூன்று ஆணையாளர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.**

2

## ராஜகிரிய, மோதறையில் தலா ஒருவருக்கு தொற்று

### 44 பேர் தனிமைப்படுத்தல்

கொழும்பு, மே. 05

ராஜகிரிய - பண்டாரநாயக்கபுர பகுதியைச் சேர்ந்த 29 பேர் கந்தக்காடு தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இறுதியாக அடையாளம் காணப்பட்டவர்களில் ஒருவர் ராஜகிரிய - பண்டாரநாயக்கபுர பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளமையை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

40 வயதான அந்த நபர் போதைக்கு அடிமையானவர் என அடையாளம்

2

# வயோதிபத் தம்பதியரைக் கட்டி வைத்துத் தாக்கி 15 பவுண் நகை, 5 லட்சம் ரூபா பணம் கொள்ளை

### இன்று அதிகாலை உடுவில் அம்பலவாணர் வீதியில் கொடூரம்

யாழ்ப்பாணம், உடுவில் அம்பலவாணர் வீதியில் வீடொன்றுக்குள் புகுந்த கொள்ளைக் கும்பல், வயோதிபத் தம்பதியைத் தாக்கிவிட்டு சுமார் 15 பவுண் தங்க நகைகள் மற்றும் 5 லட்சம் ரூபா பணத்தை கொள்ளையிட்டுத் தப்பித்துள்ளது.

வயோதிபத் தம்பதியைக் கட்டிவைத்துவிட்டு குடும்பத் தலைவரின் தலையில் கூரிய ஆயுதத்தால் குத்தி கொள்ளைக் கும்பல் சித்திரவதை செய்துள்ளது.

அதனால் படுகாயமடைந்த குடும்பத்தலைவர், தெல்லிப்பழை வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. வயோதிபத் தம்பதியின் 3 பிள்ளைகள் வெளிநாட்டில் வசிக்கின்றனர்.

"வீட்டுக்குள் நுழைந்த 3 பேர் கொண்ட கொள்ளைக் கும்பல், எங்களைக் கட்டிவைத்தது. கணவரின் தலையில் கூரிய ஆயுதத்தால் குத்தியது. எனது கன்னத்தில் அறைந்தது. அதனால் நாம் நிலைகுலைந்தோம்.

சுமார் 3 மணிநேரம் சல்லடை போட்டு தேடுதல் நடத்தி, நகைகள் மற்றும் பணத்தை கொள்ளையிட்டு

2

## கொழும்பிலிருந்து ஒரு தொகுதியினர் சொந்த ஊர்களுக்கு



கொழும்பு, மே. 05

கொரோனா தொற்று நோயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக மேல் மாகாணத்துக்குள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தினால் தமது வீடுகளை நோக்கி பயணிக்க முடியாது நிர்க்கதியான மிரிஹான பொலிஸ் பிரிவின் நுகேகொடைப் பகுதியில் தங்கியுள்ளவர்களை வீடுகளுக்கு அனுப்பும் நடவடிக்கை இன்று காலை ஆரம்பமானது.

2

## 9 ஆவது கோரோனா நோயாளி உயிரிழப்பு

கொழும்பு, மே. 05

நாட்டில் கோரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 9ஆவது நபரும் உயிரிழந்துள்ளார் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு மோதறையைச் சேர்ந்த 52 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

2

## மே 11 முதல் ரயில் சேவை



அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்கான சிறப்பு ரயில்கள் இந்த மாதம் 11ஆம் திகதி முதல் இயங்க வுள்ளது.

ஏற்கனவே குறிப்பிட்டபடி, ரயிலில் பயணிக்கும் ஊழியர்களின் விவரங்களை, நிறுவனத் தலைவர்கள் ரயில் திணைக்களத்திடம் விண்ணப்பிக்க வேண்டும்.

2

# கொரோனாக் கட்டுப்பாட்டுகளைப் பின்பற்றி இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

### ஏற்பாட்டுகுழுவினர் அறிவிப்பு



முல்லைத்தீவு, மே. 05

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு எளிமையான முறையில், கொரோனா பரவல் கட்டுப்பாட்டு நடைமுறைகளை பின்பற்றி நடைபெறும் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. இது குறித்து ஏற்பாட்டுக் குழு விடுத்துள்ள அறிவிப்பில் -

முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலைகளின் 11 ஆம் ஆண்டு நினைவேந்தல் முள்ளிவாய்க்கால்

2

## தாதிக்கும் கொரோனா

கொழும்பு, மே. 05

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கடமையாற்றும் விசேட தர தாதிய உத்தியோகத்தரும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய வைத்தியசாலையின் கட்டண விடுதியில் பணியாற்றும் தாதிய உத்தியோகத்தரே பாதிக்கப்பட்டுள்ளார். அவர் தற்போது ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.







ஊர்காவற்றுறை பகுதியில் இன்று பகல் ஹயஸ் வாகனம் ஒன்று பாதையை விட்டு விலகி மரமொன்றுடன் மோதிப் பலத்த சேதத்துக்குள்ளானது. வாகன சாரதி படுகாயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

# விபத்தில் சிறுவன் பலி

இன்று செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு கரடியனாறு பகுதியில் ஏற்பட்ட விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் படுகாயமடைந்தமையுடன் அதே குடும்பத்தை சேர்ந்த சிறுவன் பலியாகியுள்ளார்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

மட்டக்களப்பிலிருந்து இந்தக் குடும்பத்தினர் மோட்டார் சைக்கிளில் மரப்பாலத்திற்கு சென்றுகொண்டிருக்கும் போது நண்பகல் 12.30 மணியளவில் கரடியனாறு அண்மித்த பகுதியில் மோட்டார் சைக்கிள் மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு பேரும் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்கள் அருகிலுள்ள கரடியனாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரும்வழியில் ரோபெட் கெனான் என்கிற 5 வயது சிறுவன் உயிரிழந்தான் எனத் தெரிவிக்கப்படுகிறது.



சிறுவனின் தந்தை ரொபட், தாய் மதிவதனி, மற்றும் தங்கை 2 வயது ஜெய் எலெனா ஆகியோர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ் விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அமெரிக்க தூதருடன் மஹிந்த இன்று பேச்சு



கொழும்பு, மே. 05

கொரோனா வைரஸ் தாக்கத்தினால் இலங்கையின் பொருளாதாரம் பாதிப்படையாமல் தடுப்பது குறித்தும், ஆடைக் கைத்தொழில் துறை இறக்குமதிகளுக்கு அமெரிக்காவில் கூடுதல் இடமளிப்பது குறித்தும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவருடன் பேச்சு நடத்தினார்.

இலங்கைக்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவதாக இதன்போது அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார் என்று கூறப்பட்டுள்ளது.

## கொழும்பிலிருந்து .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேல் மாகாணத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோனின் தலைமையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்படிகாப்பணித்தாய்மார், நீண்டகாலமாக நோய்களில் பாதிக்கப்பட்டவர்கள், சிறார்கள் உள்ளிட்ட 500ற்கும் அதிகமானோரை தமது வீடுகளுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மிரிஹான பொலிஸ் மைதானத்தில் இன்று காலை 7 மணிக்கு நடத்தப்பட்ட வைத்திய பரிசோதனைகளை அடுத்து, இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களில் இவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

## கொரோனா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவேந்தல் முற்றத்தில் எதிர் வரும் 18.05.2020 அன்று நடைபெறும்.

கொவிட் 19 பரவல் காரணமாக தற்போது நாட்டில் நடைமுறையில் உள்ள கட்டுப்பாட்டு நடைமுறைகள், சட்டங்கள் என்பவற்றுக்கு மதிப்பளித்து அவற்றைக் கடைப்பிடித்தபடி இந்த நினைவேந்தல் அனுஷ்டிக்கப்படும்.

உள்ளூர் வளங்களை ஒன்றுதிரட்டிப் பயன்படுத்துவதன் மூலம் இந்த நினைவேந்தல் எளிமையாகவும் உரிய முறைப்படியும் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழு நிதி திரட்டல் நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடாது. இந்த நினைவேந்தல் நடவடிக்கைகள் தொடர்பில் அனைத்துப் பொதுஅமைப்புக்கள், பொதுமக்கள் அனைவரையும் இந் நினைவேந்தலுக்காய் எம்முடன் இணையுமாறு அன்புரிமையுடன் கேட்டுக் கொள்வதுடன் நினைவேந்தல் தொடர்பான நிகழ்ச்சி ஒழுங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும் - என்றுள்ளது.

## ராஜகிரிய, .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டுள்ளார்.

அதற்கமைய, அவருடன் தொடர்புபட்ட 5 குடும்பங்களைச் சேர்ந்த 29 பேர் கந்தக்காடு தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர் என வெலிக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், இராஜகிரியவில் 62 வயதுப்பெண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்ட நிலையில் அவருடன் தொடர்புடைய 15 பேர் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, இப்பகுதிகளுக்குள் இருந்து வெளியேறவோ நுழையவோ தடை விதிக்கப்பட்டுள்ளது.

## வயோதிபத் தம்பதி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும்பல் தப்பித்தது " - என்று குடும்பப் பெண் விசாரணையில் தெரிவித்தார்.

கொள்ளையர்கள் மூவரும் 20 தொடக்கம் 24 வயதுக்குட்பட்டவர்கள் தான். அவர்களில் ஒருவன் கைகளில் கையுறை போட்டிருந்தான்.

வீட்டில் பிள்ளைகளின் நகைகளுடன் 15 பவுண் நகைகள் இருந்தன. 5 லட்சம் ரூபா பணமும் இருந்தது. அவை கொள்ளையிடப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்துள்ளனர். மோப்ப நாய் அழைத்துவரப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

## மே 11 முதல் ரயில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தப்பட்டவரின் பெயர், தொலைபேசி இலக்கம், பயணத்தை ஆரம்பிக்கும் மற்றும் முடிக்கும் இடங்கள உள்ளிட்ட சில விவரங்களை நிறுவனங்கள் வழங்க வேண்டும்.

இதனடிப்படையில் பயணத்திற்குரிய வர்களின் கையடக்க தொலைபேசிகளுக்கு குறுந்தகவல் மூலம், ஆசன விவரத்தை ரயில் திணைக்களம் தெரிவிக்கும்.

குறிப்பிட்ட நேரத்திற்குச் சற்று முன்னதாக ரயில் நிலையங்களுக்கு பயணிகள் வந்து சேரவேண்டும்.

ரயில்நிலையங்களில் கைகளைச் சுத்தம் செய்ய, கிருமி நீக்க வசதி ஏற்படுத்தப்படும்.

ரயில்களில் பயணிப்பவர்களிற்கு சில அறிவுறுத்தல்களையும் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

முகக்கவசம் அணிவது கட்டாயமாகும்.

இரண்டு நபர்களுக்கிடையிலான சமூக விலகல் தூரத்தை - ஒரு மீற்றர் - கட்டாயம் பேண வேண்டும்.

ரயில் நிலையத்துக்குள் நுழையும் போது கைகளைச் சவர்க்காரமிட்டு கழுவ வேண்டும்.

திணைக்களத்தால் அனுப்பப்பட்ட குறுஞ்செய்தியைப் பெற்றால் மட்டுமே நீங்கள் நிலையத்திற்குள் நுழைய முடியும்.

ரயில் நிலையம் மற்றும் பெட்டிகளில் குப்பைகளை வீசுவது தடை செய்யப்பட்டுள்ளது

தேவையற்ற சாமான்களை எடுத்துச் செல்வதைத் தவிர்க்கவும்.

பொதுகழிப்பறைகளின் பயன்பாட்டை முடிந்தவரை குறைக்க வேண்டும்.

தனிப்பட்ட கை சுத்திகரிப்பு முறையை பயன்படுத்துவது சிறந்தது.

நீங்கள் எந்த சூழ்நிலையிலும் உங்களுக்காக ஒதுக்கப்பட்ட இருக்கையைத் தவிர வேறு எந்த இருக்கையிலும் உட்காரக்கூடாது.

## பாடசாலைகள் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி அனைத்து பாடசாலைகளும் திறக்கப் படும் என ஊடகங்களில் செய்தி வெளியாகியதாகவும், அதில் எவ்வித உண்மையும் இல்லை எனவும் அமைச்சு கூறியுள்ளது. பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும் திகதி சுகாதார அமைச்சின் ஆலோசனைக்கு அமைய அறிவிக்கப்படும் எனக் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## நாடாளுமன்றக் .......

இந்த வழக்கு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும்போது ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மனுதாரர்கள் சார்பில் முன்னிலையாகி வாதிடுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் சார்பிலும், பிறிதொரு தரப்பினாலும் இதேபோன்ற இரு வழக்குகள் இன்று தாக்கல் செய்யப்பட்டன என்றும் தெரிய வந்தது.

இதே போன்ற ஐந்துக்கு மேற்பட்ட வழக்குகள் நாளைய தினம் தாக்கல் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த மனுக்கள் அடுத்த வாரம் நடுப்பகுதியில் நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## 9 ஆவது கோரோனா .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் (ஐ.டி.எச்.) சிகிச்சை பெற்று வந்த பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.

நாட்டில் 755 பேர் (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப்பெண் உட்பட) கோரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 197 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

550 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## மீண்டும் இன்னொரு தடவை நாடாளுமன்றம் பிழைக்குமா?

நாடாளுமன்றத்தைக் கலைத்து கடந்த மார்ச் 2 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த உத்தரவை வெற்றும் வறிதுமானதாக (null and void) அறிவிக்கும்படி கோரும் முக்கிய மனு ஒன்று இன்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில், அதன் செல்நெறியைப் புரட்டிப் போட்ட பல பழைய திருப்பங்களில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட பத்திரிகையாளர் விக்டன் ஐவன் இன்று தாக்கல் செய்யப்பட்ட மனுவின் மனுதாரர்களில் முதன்மையானவர்.

அவரும், அவருடன் சேர்ந்த ஏழு பேருமே இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

அரசமைப்பின் 126 ஆம் பிரிவின் கீழ் அடிப்படை உரிமை மீறலுக்கு நிவாரணம் கோரி இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

புதிய நாடாளுமன்றத்தை அடுத்த மூன்று மாதத்துக்குள் கூட்ட முடியும் என்ற நிபந்தனையுடன்தான் நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் –

ஆனால் மார்ச் 2 ஆம் திகதி கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் இடத்துக்கு ஜுன் 02 ஆம் திகதிக்கு முன்னர் புதிய நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு வாய்ப்பு இல்லை என்று சுட்டிக் காட்டி, அதனால் மார்ச் 2 இல் மேற்கொள்ளப்பட்ட நாடாளுமன்றக் கலைப்பு உத்தரவு செல்லுபடியற்றது என்றும் –

இன்று காலை தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாக சட்டமா அதிபர் மற்றும் தேர்தல் ஆணையகத்தின் ஆணையாளர்கள் மூவர் என மொத்தம் 4 பேர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கின் பிரதான பேசுபொருள் நாடாளுமன்றத்தைக் கலைத்த ஜனாதிபதியின் உத்தரவு. அதனை வழங்கியவர் ஜனாதிபதி. அவரது நாடாளுமன்றக் கலைப்புப் பிரகடனத்துக்கு எதிரானதுதான் இந்த வழக்கு.

ஆனால் அவரது பெயர் எதிர்மனுதாரராகக் குறிப்பிடப்படவில்லை. அதற்குக் காரணம் உண்டு.

தற்போதைய அரசமைப்பின்படி –

19 ஆவது அரசமைப்புத் திருத்தம் கொண்டு வரப்படும் காலம் வரை –

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு எதிராக அவர் பதவியில் இருக்கும் வரை யாரும் வழக்கு வைக்க முடியாது.

ஆனால், அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் அந்த நிலைப்பாட்டை மாற்றியமைத்தது.

ஜனாதிபதி என்ற முறையில் அவர் மேற்கொண்ட அல்லது மேற்கொள்ளாமல் விட்ட எந்த நடவடிக்கை தொடர்பிலும் அவருக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது என்பது தான் பழைய ஏற்பாடு.

அதையே 19 ஆவது திருத்தம் மாற்றி அமைத்தது.

19 ஆவது திருத்தத்தின் பிரகாரம் ஜனாதிபதி என்ற முறையில் அவர் எடுத்த அல்லது எடுக்கத் தவறிய ஒரு நடவடிக்கைக்கு எதிராக வழக்குத் தொடர முடியும். எனினும், அந்த வழக்கில் அவரை எதிர்மனுதாரராகப் போடக் கூடாது. அவருக்குப் பதிலாக சட்ட மா அதிபரை எதிர்மனுதாரராகக் குறிப்பிட வேண்டும்.

அதன் பிரகாரம் ஜனாதிபதியின் நடவடிக்கைக்கு எதிரான இந்த வழக்கிலும் சட்ட மா அதிபர் எதிர் மனுதாரராகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

இந்த மனு நீதிமன்றத்தில் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஜனாதிபதியின் நாடாளுமன்றக் கலைப்பு உத்தரவுக்கு எதிராக ஓர் இடைக்காலத் தடையோ அல்லது நிரந்தரத் தீர்ப்போ வழங்கப்படுமானால் கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் ஓர் அரசியல் சாதனை புரிந்த களமாகும்.

ஏற்கனவே 2018 இறுதியில் இந்த நாடாளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தலுக்கு உத்தரவிட்ட அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிரகடனத்தை அப்போதைய உயர்நீதிமன்றத்தின் ஏழு நீதியரசர்களைக் கொண்ட ஆயம் ஏகமனதாக வெற்றும் வறிதுமாக்கும் உத்தரவை விடுத்திருந்தது.

அந்த வரிசையில் மீண்டும் இரண்டாவது தடவையும் உயிர் பிழைத்து மீண்ட அதிசயத்துக்குரிய வரலாறைக் கொண்டதாக இந்த நாடாளுமன்றம் மாறும்.

அதன் உறுப்பினர்கள் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் 'முன்னாள் எம்.பிக்களாகி' தேர்தலின்றி திரும்பவும் 'எம்.பிக்கள்' பாக்கியம் பெற்றவர்களாவர்.

பார்ப்போம் நடப்பது என்னவென்று. இன்னும் இரண்டொரு வாரங்களில் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் தலைவிதி பற்றிய சட்ட முடிவு வந்து விடும்.

# பல்கலைக்கழகங்களின் கற்கைகள் மீள ஆரம்பிக்கப்படுவது ஒத்திவைப்பு

நாட்டில் பல்கலைக்கழகங்களின் கற்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவது ஒத்திவைக்கப்பட உள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்று பரவலைக் கட்டுப்படுத்த நாட்டில் கொண்டுவரப்பட்ட கட்டுப்பாடுகளையடுத்து பல்கலைக்கழக நடவடிக்கைகள் யாவும் கடந்த மார்ச் 13ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டன.

இந்த நிலையில் பல்கலைக்கழகங்களின் கற்கை நடவடிக்கைகள் வரும் 11ஆம் திகதி முதல் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கப்படும் எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன்னர் அறிவித்திருந்தது.

எனினும் சுகாதாரத் துறையின் ஆலோசனையின்படி பாதுகாப்பான சூழல் ஏற்படும் வரை பல்கலைக்கழகங்களை மீண்டும் திறக்க முடியாது எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணையக்குழு இன்று தெரிவித்துள்ளது.

# மன்னாரில் சுண்டைக்காய் செய்கையாளர்கள் பாதிப்பு



மன்னார், மே. 05

மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள சில கிராமங்களில் மக்கள் பெருமளவான தோட்டச் செய்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தத் தோட்டச் செய்கையுடன் சுண்டைக்காய் என்று அழைக்கப்படுகின்ற ஒரு மரக்கறி பயிர் அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சன்னார், ஈச்சலவக்கை, பெரியமடு ஆகிய கிராமங்களில் சுமார் நூறு ஏக்கர் நிலப்பரப்பில் இந்தப் பயிர் செய்கை பாரிய அளவில் முன்னெடுக்கப்படுகின்றது.

பல லட்சம் ரூபா முதலிட்டு இந்தப் பயிர்ச்செய்கையை முன்னெடுத்து வருகின்றனர். சுண்டைக்காயை வடக்கு மாகாணத்தில் உள்ள மக்கள் விரும்பி உண்பது இல்லை. ஆனால் தென் பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. தென்பகுதி மக்களிடம் மிகவும் வரவேற்பை பெற்றது இந்த சுண்டைக்காய்.

இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அதிகளவானவர்கள் தமது வாழ்வாதார தொழிலாக சுண்டைக்காய் பயிர்ச்செய்கையினை முன்னெடுத்து வருகின்றனர்.

சுண்டைக்காய் முற்றுவதற்கு முன் அவற்றை சந்தைப்படுத்த வேண்டும். ஆனால் தற்போது காய் முற்றும் நிலையில் காணப்படுகின்றது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அவற்றை ஏற்றுமதி செய்ய முடியாத நிலையில் உள்ளனர். இதனால் பல குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ள நிலையில் காணப்படுகின்றனர்.

தமது உற்பத்திப் பொருட்களை கொண்டு சென்று சந்தைப்படுத்த முடியாத நிலையில் தாம் பல்வேறு பிரச்சினைகளுக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்து வருவதாக சுண்டைக்காய் செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# பாதிக்கப்பட்டுள்ள வர்த்தக நிறுவனங்களின் தகவல்களைப் பெறும் கால எல்லை நீடிப்பு!

கொரோனா வைரஸ் தொற்று நிலைமையின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வர்த்தக நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை பெற் றுக்கொள்வதற்கான கால எல்லை 2020 மே மாதம் 15ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

இதுதொடரபாக தொழில் ஆணையாளர் நாயகம் விடுத்துள்ள அறிக்கை பின்வருமாறு:-

கொரோனா வைரஸ் தொற்று நிலைமையின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வர்த்தக நிறுவனங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்.

கொரோனா வைரசு தொற்று நிலைமையின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வர்த்தக நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான கால எல்லை 2020 மே மாதம் 15ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டிருப்பதாக தொழில் ஆணையாளர் நாயகம் திரு. ஏ.விமலவீர அறிவித்துள்ளார்.

தமது நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக வர்த்தக சமூகத்தினர் சாதகமாக பதில்களை அளித்துவருவதினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைவாக https://forms.gle/pE64ygeuHrK7TZcH9 என்ற இணையதள லிங்கில் (web link) பிரவேசித்து நேரடியாக தகவல்களை வழங்க முடியும் என்றும் இதற்கு மேலதிகமாக தொழில் திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ இணையதளமான www.labourdept.gov.lk பதிலளிக்க முடியும் என்றும் தொழில் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.


# ஊடகக் குருகுலம்

ஊடக ஜாம்பவான் திரு வித்தியாதரன் மற்றும் காலைக்கதிரின் அனுபவம்மிக்க ஆசிரியர் குழுவின் கீழ் ஊடகத்துறையினை கற்க ஓர் அரிய சந்தர்ப்பம்.

அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் ஆகியவற்றை அடிப்படையில் இருந்து கற்றுத்தேர்ந்திட காலைக்கதிரின் ஊடக குருகுலத்தில் இணையுங்கள்.

ஊடகத்துறையில் ஆர்வமுள்ள யாரும் இணைந்துகொள்ளலாம்.
உங்களின் சுயவிபரக்கோவையினை
**kalaikkathironline@gmail.com** எனும் மின்னஞ்சல் முக வரிக்கு அனுப்பிவையுங்கள்.

தொடர்புகளுக்கு: 076 443 8623

தகவல் - நிர்வாகி
பசுமை ஊடகம்

# இந்தியாவில் வைரஸ் தொற்று 46 ஆயிரத்தையும் கடந்தது

## ஒரே நாளில் 195 பேர் மரணம்



உயிரிழந்தவரின் உடலை பாதுகாப்பாக அடக்கம் செய்த ஊழியர்கள்

புதுடெல்லி,மே05

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 46ஆயிரத்தை கடந்துள்ள நிலையில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1568 ஆக உயர்ந்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருகிறது. ஊரடங்கு உத்தரவு, நோய் அறிகுறி உள்ளவர்களை தனிமைப்படுத்தி சிகிச்சை அளித்தல் உள்ளிட்ட பல்வேறு நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெறுகின்றன. தற்போது கொரோனா பாதிப்பு குறைவாக உள்ள பகுதிகளில் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளது. எனினும் பரிசோதனைகளை அதிகரிக்க அதிகரிக்க, புதிய நோயாளிகளின் எண்ணிக்கையும் உயர்ந்து வருகிறது. உயிரிழப்பும் கணிசமாக உயர்கிறது.

இந்நிலையில் மத்திய சுகாதாரத்துறை இன்று வெளியிட்டுள்ள தகவலின்படி, இந்தியாவில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 46 ஆயிரத்தை கடந்துள்ளது. மொத்தம் 46,433 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். 24 மணி நேரத்தில் 195 பேர் மரணமடைந்துள்ளனர் . இதனால் இந்தியாவில் 1568 ஆக உயர்ந்தது கொரோனா உயிரிழப்பு.


# மராட்டியத்தில் 583 பேர் பலி!

கொரோனா பாதிப்புக்குள்ளாகி மராட்டியத்தில் பலியானோர் எண்ணிக்கை 583 ஆக உயர்வடைந்து உள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் தீவிரப் பாதிப்பு ஏற்படுத்தி வருகிறது. நாட்டில் ஊரடங்கு உத்தரவு அமலில் உள்ளது. எனினும், பாதிப்பு மற்றும் பலி எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. பொதுமக்கள் தங்களைக் காத்து கொள்ள ஊரடங்கு விதிகளை முறையாக கடைப்பிடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு உள்ளனர்.

நாட்டில் அதிக அளவாக மராட்டியத்தில் 14,541 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டு உள்ளது. கடந்த 24 மணிநேரத்தில் 35 பேர் பலியான நிலையில், பலி எண்ணிக்கை 548ல் இருந்து 583 ஆக உயர்ந்து உள்ளது. 2 ஆயிரத்து 465 பேர் குணமடைந்து வீடு திரும்பி உள்ளனர்.

# மரண அறிவித்தல்



தோற்றம் 13 - 08 - 1936

மறைவு 04 - 05 - 2020

புத்தூரைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தியை வதிவிடமாகவும் கொண்ட

## பொன்னன் குணரத்தினம்

(ஓய்வுபெற்ற முதுநிலை கணக்காளர்)

புத்தூரைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தியை வதிவிடமாகவும் கொண்ட பொன்னன் குணரத்தினம் (ஓய்வுபெற்ற முதுநிலை கணக்காளர்) நேற்றுக் காலை இறைவனடி சேர்ந்தார்.

இவர் பொன்னன் - மீனாட்சி தம்பதிகளின் மூத்த புத்திரனும் விநாயகமலரின் அன்புக் கணவரும் காங்கேசு - கண்மணியின் மருமகனும் அன்பரசி (தொழில் நுட்பவியலாளர்), கலையரசி(பொறியியலாளர், கண்டி), திருக்குமரன் (முதுநிலை விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), ஞானக்குமரன் (ஊடகவியலாளர்), எழிலரசி ஆகியோரின் அன்புத் தந்தையும், வாசுதேவன் (பொறியியலாளர்), குணசிங்கம்(பொறியியலாளர்), தயாநிதி(ஆசிரியர்,கோ/கிறிஸ்தவ கல்லூரி), சுகிர்தா ஆகியோரின் அன்பு மாமனும் யதுசன், கோசிகன், பிரபாத், பிரவீண், தேஜஸ்வினன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), சாதனா, சாளினி, ஆர்த்திகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

தகவல் - மகன்
கு.திருக்குமரன்
0777910654

8th KM Post, பருத்தித்துறை வீதி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்

# மரண அறிவித்தல்



கொத்தியாவத்தை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும்
இருபாலை குளுக்கண்டி லேனை வசிப்பிடமாகவும் கொண்ட

## தம்பிப்பிள்ளை குருநாதன்

தோற்றம் 01.02.1945

மறைவு 04.05.2020

கொத்தியாவத்தை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் இருபாலை குளுக்கண்டி லேனை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை குருநாதன் அவர்கள் 04-05- 2020 திங்கட்கிழமை இறைவனடி சோர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகனும் மல்லிகாவின் அன்புக் கணவரும் தர்சினி (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான மதன், ஜனரர்த்தனன் மற்றும் ஜனகன் (இருபாலை), நிருசன் (இருபாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுரேஸ்கரன் (ஜேர்மனி), ஜெயவதனி ஆகியோரின் அன்பு மாமானாரும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் தவமணி (சுன்னாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் நிதர்சனா (ஜேர்மனி), ஜதுர்சனா (ஜேர்மனி), பானுஜா, ரேணுஜா, தஸ்வின் ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின்இறுதிக் கிரியைகள் 05.05.2020 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனத்துக்காக இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தொடர்புகளுக்கு:-
மனைவி 0094772081058
0094771661444
மகள் தர்சி
மகன் ஜனா
மகன் நிரு

தகவல்:
குடும்பத்தினர்

# ரஷ்யாவில் கொரோனா மிக ஆபத்தான நிலையில்; மருத்துவப் பணியாளர்கள் தற்கொலைக்கு முயற்சி



மொஸ்கோ,மே05

ரஷ்யாவில் கொரோனா நிலைமை மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும், டாக்டர்களுக்கே பாதுகாப்பு இல்லை எனவும் எச்சரித்து மூன்று டாக்டர்கள் மருத்துவ மனைக் கட்டடங்களிலிருந்து ஜன்னல் வழியாக விழுந் துள்ளனர்.

ரஷ்யாவில் கடந்த இரண்டு வாரங்களில் மூன்று முன்னணி சுகாதாரப் பணியாளர்கள மருத்துவமனை ஜன்னல்களிலிருந்து மர்மமான முறையில் விழுந்து உள்ளனர். இது கொரோனா வைரஸ் தொற்றுநோய்க்கு மத்தியில் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்க ளின் பணி பாதுகாப்பு அச்சத்தை அளித்து உள்ளது.

அந்த சுகாதாரப் பணியாளர்களில் இருவர் இறந்து விட்டனர். ஒருவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். ரஷ்ய சட்ட அமலாக்க அதிகாரிகளால் விசா ரிக்கப்படும் இந்த மூன்று சம்பவங்களும் ரஷ்ய பத்தி ரிகைகளிலும் சமூக ஊடகங்களிலும் தீவிர விவாதத் தைத் தூண்டி உள்ளன.

ரஷ்யாவில் கொரோனா வைரஸ் மின்னல் வேகத் தில் பரவி வருகிறது. அந்த நாட்டில் கொரோனா பாதித் தவர்களின் எண்ணிக்கை 1 லட்சத்தை கடந்துள்ளது. இன்று புதிதாக 10,581 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் அங்கு கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தற்போது ஒரு லட்சத்து 45 ஆயிரத்து 268 ஆக உயர்ந்துள்ளது.

மேலும் வைரஸ் தொற்றுக்கு இன்று 76 பேர் உயிரி ழந்தமையால், அங்கு பலியானோர் எண்ணிக்கை 1,356 ஆக உயர்ந்துள்ளது.

கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து இதுவரை 18,095 பேர் குணமடைந்துள்ளனர். கொரோனா தொற்றுப் பாதிப்புகள் தொடர்ந்து அதிகரித்த போதிலும், எஞ்சிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இறப்பு விகிதம் அங்கு குறைவாகவே உள்ளது குறிப்பிடத்தக்கது.

ரஷ்யாவில் கொரோனா நிலைமை மிகவும் ஆபத் தான கட்டத்தில் உள்ளதாகவும், மருத்துவர்களுக்கே உரிய பாதுகாப்பு இல்லை எனவும் எச்சரித்து மூன்று மருத்துவ ஊழியர்கள் மருத்துவமனை ஜன்னலில் இருந்து குதித்துள்ளனர்.

தென்மேற்கு ரஷ்யாவின் வோரோனேஜ் நகரில் நோவஸ்மான்ஸ்கயா மாவட்ட மருத்துவமனையில் டாக்டர் அலெக்சாண்டர் ஷூலேபோவ்(37) அம்புலன்ஸ் பிரிவில் பணியாற்றி வந்தார். தற்கொலை முடிவை எடுக்கும் முன்னர் தமது சக மருத்துவர் ஒருவருடன் காணொலி ஒன்றை பதிவு செய்த அவர், தங்களை அதி கமாக வேலை வாங்குவதாகவும், பாதுகாப்பு கருவிகள் ஏதுமின்றி கொரோனா சிகிச்சைக்கு கட்டாயப்படுத் துவதாகவும், தங்களுக்கு கொரோனா உறுதியான பின்னரும் பணியில் தொடரம் கட்டாயப்படுத்துவதாக வும் குற்றஞ்சாட்டியிருந்தார்.

ஆனால் டாக்டர் ஷூலேபோவ் கூறியவை உண் மைக்குப் புறம்பானவை எனத் தெரிவித்து அவரது சக மருத்துவரிடம் ரஷ்ய பொலிஸார் விசாரணை மேற் கொண்டுள்ளனர்.

ஷூலேபோவ் தற்கொலைக்கு முயன்றமை போலவே இதற்கு முன்னரும் இரண்டு பெண் மருத்துவர்கள், ரஷ்யாவின் கொரோனா பாதுகப்பு எச்சரிக்கை விடுத்துள் ளமையுடன் மருத்துவமனை ஜன்னலில் இருந்து குதித்துத் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

# ஆய்வகத்திலிருந்து தோன்றியது அல்ல கொரோனா வைரஸ்

## உளவு அறிக்கையில் தகவல்



அமெரிக்கா மற்றும் நட்பு நாடு களிடையே பகிரப்பட்ட உளவுத் துறை அறிக்கையில் கொரோனா வைரஸ் உகான் ஆய்வகத்தில் இருந்து தோன்றவில்லை, அங்குள்ள சந்தையில் இருந்தே தோன்றி உள்ளது எனக் கூறப் பட்டு உள்ளது.

சீனாவின் உகான் நகர ஆய்வ கத்திலிருந்து தான் கொரோனா வைரஸ் பரவியது என அமெரிக்கா தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறது.

அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் மைக் பாம்பியோ இந்த வாரத் தொடக்கத்தில் உகானில் உள்ள வைராலஜி ஆய்வகத்திலிருந்துதான் கொரோனா வைரஸ் உருவானது என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன என்று கூறியிருந்தார்.

கொரோனா விவகாரத்தில் சீனாவின் உகான் நகரில் என்ன நடந்தது என்பது குறித்து நாங்கள் மிகவும் வலுவான அறிக்கையை வெளியிடு வோம். அது மிகவும் முடிவானதாக இருக்கும் என்றுமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நேற்று கூறினார்.

இந்த நிலையில் அமெரிக்கா உள்பட 5 நாடுகளை சேர்ந்த ஐந்து கண் கள் உளவு பகிர்வுக் கூட்டணி என்ற அமைப்பு வெளியிட்டு உள்ள தகவலில் கொரோனா வைரஸ் உகான் ஆய்வகத்தில் இருந்து தோன்றவில்லை, அங்குள்ள கடல் உணவு சந்தையில் இருந்தே தோன்றி உள்ளது என கூறி உள்ளது.

அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளால் ஏற்படுத்தப்பட்டது ஐந்து கண்கள் உளவு பகிர்வு கூட்டணி. இந்த அமைப்பு நாடுகள் அளவிலான பரந்த உளவுத்துறை தகவல்களை பகிர்ந்து கொள்கின்றன.

உளவுத்துறை அறிவு கொண்ட ஒரு மேற்கத்திய தூதரக அதிகாரி ஒருவர் கூறும்போது - கொரோனா வைரஸ் பரவல் என்பது ஒரு விபத்து என்பது சாத்தியமில்லை என்று நாங்கள் நினைக்கிறோம். இது இயற் கையாகவே நிகழ்ந்திருக்கலாம் மற்றும் மனித நோய்த்தொற்று இயற்கை யான மனித மற்றும் விலங்குகளின் தொடர்புகளிலிருந்து வந்திருக்கலாம். ஐந்து கண்கள் உளவுத்துறை பகிர்வு கூட்டணியில் உள்ள நாடுகள் இந்த மதிப்பீட்டைச் செய்வதில் ஒன்றிணைகின்றன எனக் கூறினார்.

ஐந்து கண்கள் உளவுப் பகிர்வுக் கூட்டணி நாட்டைச் சேர்ந்த இரண் டாவது அதிகாரி முறையான மதிப்பீட்டை அமெரிக்கா இன்னும் பகிரங் கப்படுத்தவில்லை என்பதை ஒத்து கொண்டார்.

பிரத்தியேக உளவுத்துறைப் பகிர்வு குழுவின் உறுப்பினர்களிடமி ருந்து வந்துள்ள இந்த மதிப்பீடு சமீபத்திய நாள்களில் டிரம்ப் மற்றும் பாம் பியோவின் பலமான கூற்றுக்களை சந்தேகத்திற்கு உட்படுத்துவதாக தெரிகிறது.

இந்தத் தகவல் டிரம்ப் நிர்வாகம் தனது கூற்றை ஆதரிப்பதற்கான ஆதாரங்களை வழங்குவதற்கான அழுத்தத்தை அதிகரிக்கும், ஜனாதி பதி மற்றும் அவரது உயர் தூதரிடமிருந்து ஆக்கிரோமான பேட்டியை மீறி இதுவரை ஆதாரங்களை கொடுக்க செய்யத் தவறிவிட்டனர்.

நேஷனல் ஜியோகிராஃபிக் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், அமெரிக்க உயர்மட்ட தொற்று நோய் நிபுணரான டாக்டர் அந்தோனி ஃபவுசி, கொரோனா வைரஸ் ஒரு ஆய்வகத்தில் தோன்றியதாக நம்பவில்லை என்று கூறி இருந்தார்.

# விமானம் வீழ்ந்து விபத்து சோமாலியவில் 7 பேர் பலி


சோமாலியா நாட்டில் கொரோனா நிவா ரண பொருள்களை சுமந்து சென்ற விமா னம் விபத்தில் சிக்கியதில் 6 பேர் பலியாகினர்.

சீனாவில் கண்டறியப்பட்டு உலகம் முழுவதும் பரவியுள்ள கொரோனா வைரஸ் சோமாலியா நாட்டிலும் பாதிப்பு ஏற்படுத்தி யுள்ளது. அந்நாட்டில் மந்திரி ஒருவர் கடந்த ஏப்ரலில் கொரோனாவுக்குப் பலியா னார்.

சோமாலியாவில் கொரோனாவுக்கு எதிரான போரில் விநியோகிக்கப்படும் பொருள் களை ஏற்றி கொண்டு சரக்கு விமானம் ஒன்று மொகதிசு நகரில் இருந்து பைதவா நகருக்கு சென்றது. இதன்பின்னர் அந்நகரிலி ருந்து பர்டேல் நகருக்கு புறப்பட்டது. இதில் அந்த விமானம் திடீரென விபத்தில் சிக்கி விழுந்தது.

இந்த சம்பவத்தில் விமானத்தில் பயணம் செய்த விமானி, துணை விமானி, விமான பொறியியலாளர் மற்றும் ஒரு பயிற்சி விமானி உள்ளிட்டோருடன் 6 பேர் பலியாகி உள்ளனர். இவர்களில் 5 பேரின் உடல்கள் மீட்கப்பட்டு உள்ளன. 2 பேர் விமான நிறுவன பணியா ளர்கள்.

# கொரோனாவுக்குத் தடுப்பு மருந்தை இஸ்ரேல் கண்டு பிடிப்பு என அறிவிப்பு




ஜெருசலம்,மே05

இஸ்ரேலிய பாதுகாப்பு உயிரியல் ஆராய்ச்சி ஆய்வகத்தில் கொரோனா வைரஸ் பிறபொருளெதிரியை உருவாக்கி யுள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. இது கொரோனா தொற்றுநோய்க்கு சாத்திய மான சிகிச்சையை நோக்கிய குறிப்பிடத் தக்க முன்னேற்றம் என்று இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் கூறினார்.

இஸ்ரேல் பாதுகாப்பு மந்திரி நப்தாலி பென்னட் பாதுகாப்பு உயிரியல் ஆராய்ச்சி ஆய்வகத்திற்கு நேற்றுச் சென்றார், அங்கு கொரோனா வைரஸுக்கு மருந்தைக் கண்டு பிடிப்பதில் அடைந்த குறிப்பிடத்தக்க முன் னேற்றம் குறித்து அவருக்கு விளக்கமளிக் கப்பட்டது.

இந்தச் சாதனைக்காக ஆராய்ச்சியாளர் களைப் பாராட்டிய பென்னட் இந்தப் பயங்கர முன்னேற்றத்திற்கான நிறுவன ஊழி யர்களைப் பற்றி நான் பெருமைப்படுகி றேன், அவர்களின் படைப்பாற் றல் மற்றும் யூத மனம் இந்த அற்புதமான சாதனையை கொண்டு வந்தது என கூறினார்.

இது குறித்து பென்னட் அறிக் கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

பாதுகாப்பு உயிரியல் ஆராய்ச் சிக்கான இஸ்ரேல் நிறுவன மானத்தில்(ஐ.ஐ.பி.ஆர்.) உருவாக் கப்பட்ட 'மோனோக்ளோனல் நியூட்ராலைசிங் ஆன்டிபாடி' நோயாளிகளின் உடல்களுக்குள் நோயை உருவாக்கும் கொரோனா வைரஸை அழிக்க முடியும் எனக் கூறி உள்ளார்.

ஆன்டிபாடி செய்முறை காப் புரிமை பெறுகிறது என்று ஐ.ஐ.பி.ஆர். இயக்குனர் ஷ்மு வேல் ஃபிரா கூறினார். அதன் பிறகு சர்வதேச உற்பத்தியாளர் அதைப் பெருமளவில் உற்பத்தி செய்ய முற்படுவார் என தெரிவித் துள்ளார்.

உலகின் மிகப்பெரிய இரண்டு சர்வ தேச மருந்து நிறுவனங்களுடன் தற்போது பேச்சுகள் நடந்து வருகின்றன. ஒன்று இந் தியாவிலிருந்து, மற்றொன்று அமெரிக்கா விலிருந்து.

சிறிய தெற்கு நகரமான யெருஹாமில் இஸ்ரேலின் முதல் தடுப்பூசி உற்பத்தி தொழிற்சாலையை திறக்க பெரிய திட்டங் களை இஸ்ரேல் வகுத்துள்ளது இஸ்ரேல் உயிரியல் ஆராய்ச்சி நிறுவனம் (ஐ.ஐ.பி. ஆர்.) மற்றும் இரண்டு வருங்கால சர்வ தேச மருந்து நிறுவனங்களில் ஒன்றாகும் என்று யெருஹாம் உள்ளூராட்சி மன்றத் தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள் ளார்.

# கொரோனா வைரஸ் காரணமாக மூன்றாம் உலக நாடுகள் பொருளாதார, கடன் நெருக்கடியை எதிர்கொள்கின்றன

## அணிசேரா நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் 'டெலிகொன்பரன்ஸ்' முறையில் நேற்று கோட்டா உரை



கொழும்பு,மே05

கொரோனா வைரஸ் காரணமாக மூன்றாம் உலக நாடுகள் முன்னர் ஒருபோதும் இல்லாத பொருளாதார நெருக்கடியையும், கடன் நெருக்கடியையும் எதிர்கொள்கின்றன என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

'டெலிகொன்பரன்ஸ்' முறையின் மூலம் நேற்று அணிசேரா நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாடு இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொரோனா வைரஸ் காரணமாக மூன்றாம் உலகநாடுகள் முன்னர் ஒருபோதும் இல்லாத பொருளாதார நெருக்கடியையும், கடன் நெருக்கடியையும் எதிர்கொள்கின்றன எனச் சுட்டிக்காட்டினார்.

மேலும், மூன்றாம் உலகநாடுகளுக்கு கடன் நிவாரணமும், நிதி உதவிகளும் அவசியம் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்தவகையில், சர்வதேச நிதி அமைப்புகளும், நிதி வழங்குநர்களும் பலவீனமான நிலையில் உள்ள நாடுகளுக்கு கடன் நிவாரணத்தையும், அதிகளவு நிதியையும் வழங்கவேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் காரணமாக நடுத்தர வருமான நாடுகள் கடுமையான பல்வேறுவகைப்பட்ட பொருளாதார சமூக பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன என்பதையும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக இந்த முக்கியமான தருணத்தில் இந்த தேவைகள் குறித்து கவனத்தை செலுத்துவதும், பொருளாதார வீழ்ச்சியை, தடுப்பதற்காக நிதி உதவிகளை வழங்குவதும் அவசியம் எனவும் அவர் தெரிவித்தார்.

## முன்னாள் எம்.பியின் பாதுகாவலர் கைது!

கொழும்பு, மே. 05

கண்டி மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பாதுகாவலராகக் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

8 வயதுச் சிறுமியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் வீட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் கடமையில் ஈடுபட்டு வருகிறார். வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

## முதியவருக்கு வீடு வழங்கிய ராணுவம்











கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் மேற்கு பகுதியில் முதியவருக்கு இராணுவத்தினரால் புதிய வீடு அமைத்து கையளிக்கப்பட்டு கையளிக்கும் நிகழ்வு இன்று இடம்பெற்றது.

ஜே 263 கிராம சேவையாளர் பிரிவில் வயோதிப் பெண்மணி ஒருவர் தனது பேரப்பிள்ளையுடன் வசித்து வருகின்றார். அவருக்கு வீட்டுத்திட்டம் வழங்குவதற்கு கோப்பாய் பிரதேச செயலகத்தால் மறுப்பு தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், இந்த விடயம் இராணுவத்தினருக்கு தெரியப்படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து நுகேகொடை பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மை இன பெண்மணியான துாரா தேனுவர என்பவர் அவருக்கான வீட்டினை அமைத்து வழங்க முன்வந்திருந்தார்.

இராணுவத்தின் ஒத்துழைப்புடன் கட்டிமுடிக்கப்பட்ட வீட்டினை தனது பிறந்த தினமான இன்று அந்தப் பெண்மணி கையளித்தார்.

இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் வணிகசூரிய சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு வீட்டினை திறந்து வைத்து குறித்த பெண்மணியிடம் ஒப்படைத்தார்.

நிகழ்வில் ராணுவத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டு இருந்தனர்.

காலைக்கதிர் Kalaikathir

செவ்விளனி

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு



தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

நாளைய (06.05.2020) தலைப்பு செவ்விளனி

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

## காலியில் எரிந்த கடைகள்!

கொழும்பு, மே. 05

காலி நகரிலுள்ள கடைத் தொகுதி ஒன்றில் நேற்றிரவு தீ விபத்து ஏற்பட்டதையடுத்து, 8 கடைகள் தீக்கிரையாகியுள்ளன.

காலி பொலிஸாருக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து, பொலிஸாரும், காலி நகர சபை தீயணைப்புப் பிரிவினரும் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## வகுப்பு நடத்திய அதிபர் கைது

கொழும்பு, மே. 05

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மேலதிக வகுப்புக்களை நடத்திய மடுல்சீமை பகுதியின் தமிழ்ப் பாடசாலை அதிபர் ஒருவரை, மடுல்சீமை பொலிசார் கைது செய்துள்ளனர்.

மடுல்சீமைப் பகுதியின் மாதோவ பெருந்தோட்ட கீழ்ப் பிரிவு தமிழ் வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மேலதிக வகுப்புக்கள் நடத்தப்பட்டுக் கொண்டிருந்த வேளையிலேயே, அங்கு சென்ற பொலிஸார் வித்தியாலய அதிபரைக்கைது செய்துள்ளனர்.

மடுல்சீமைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அதிபர், விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டார் என்றும் அவருக்கு எதிராக, வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்வித் திணைக்கள சுற்றறிக்கையை மீறி, வகுப்புக்கள் நடத்தியமை கருதியே, இந்த அதிபர் கைது செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் வழிகாட்டல் கையேட்டை தயாரிக்கும் பணியில் ஆணைக்குழு

கொழும்பு, மே. 05

2020பொதுத்தேர்தலைநடத்துவதற்கான வழிகாட்டல்கையேட்டைதயாரிக்கும்பணியில் தேர்தல்கள் ஆணைக்குழு ஈடுபட்டுள்ளது.

அதன்படி சுகாதார அதிகாரிகளுடன் தேர்தல்கள் ஆணைக்குழு கலந்துரையாடல்களைத் இன்று செவ்வாய்க்கிழமை முதல் தொடங்கியுள்ளதுஎனஅறிவிக்கப்பட்டுள்ளது.

வேட்புமனுக்கள் கையேற்கப்பட்ட சில தினங்கள்அரசபொதுவிடுமுறைதினங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தமையால், ஏற்கப்பட்ட வேட்புமனுக்களின் செல்லுபடித்தன்மை தொடர்பில் சிக்கல் ஏற்பட்டிருந்தது.

அதாவது பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட மார்ச் மாதம் 17, 18, 19 ஆம் திகதிகளை விசேட அரச பொது விடுமுறையாக அறிவித்து வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு, சட்ட வியாக்கியானத்தைக் கோரியதை அடுத்து, 2020 ஆம் ஆண்டுக்கான பொதுத்தேர்தலுக்கான ஏற்பாடுகளைத்தற்போதுள்ள சட்டங்களைப் பின்பற்றி முன்னெடுத்துச் செல்லுமாறு சட்டமா அதிபரால் அறிவிக்கப்பட்டது.

மேலும் 2020 ஆம் ஆண்டுக்கான பொதுத் தேர்தலுக்குரிய வேட்புமனுக்களை ஏற்று, அது தொடர்பான ஆரம்பகட்டச் செயற்பாடுகளைத்தேர்தல்கள்ஆணைக்குழு ஆரம்பித்துள்ளதைத் தாம் அவதானித்தார் எனச் சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா அந்தக் கடிதத்தில் நேற்று குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் சுகாதார அதிகாரிகளுடன் இணைந்துதேர்தலைநடத்துவதுதொடர்பான கையேட்டைத் தயாரிக்கும் பணியில் தேர்தல்கள் ஆணைக்குழு இறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சாயிபகவானின் பாதங்களில் சரணடைந்த

## அறங்காவலர் சுப்ரமணியம் செட்டியார்



நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகத்தினர், இந்து சமயத்தின் காப்பாளர்கள். அந்த சமூகத்தின் வழிவந்த ஆலய அறங்காவலர் டாக்டர் சிதம்பரம் சுப்ரமணியம் செட்டியார் அவர்களின் மறைவு, சைவ மக்களின் இதயங்களில் பெரும் துயரை ஏற்படுத்தியுள்ளது. சிறந்த வணிகரும், பொறியாளரும், ஆலய அறங்காவளரும், ஆலய நிர்வாகியுமான இவரது சமய சமூக சேவைகள் பல.

பிறப்பொன்று இருந்தால் இறப்பொன்று இருக்கும்! இது அனைத்து உயிர்களுக்கும், பிறவிகளுக்கும் பொதுவானது. வாழுகின்ற காலத்தில் செய்கின்ற சேவைகள்தான், நாம் வாழ்ந்த காலத்தின் பெருமை தரக்கூடிய சாதனைகள். அதிலும் சாயி பக்தியுடன் வாழ்ந்துவிட்டால், அந்தப்பிறவி தானேடுத்த முழுப் பயனையும் பெற்றுவிடும். அமரர் சுப்ரமணியம் செட்டியார் அவர்களின் மறைவு, சாயி பக்தர்களின் மனங்களை கலங்கச் செய்துவிட்டது.

கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையத்தின் மாதாந்த சாயிபஜனையை, கொழும்புதெற்கில் வாழும் சாயி பக்தர்களுக்காக, கொழும்பிலுள்ள அவரது இரண்டு ஆலயங்களில், பல வருடங்களாக எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாது, சாயி சேவை என்ற கண்ணோட்டத்தில் செய்த உதவிகளும், பாபாவின் பிறந்தநாள் நிகழ்வுகளை நடாத்துவதற்கு செய்த ஊக்குவிப்புக்களும் மறக்கமுடியாதவையாகும். பம்பலபிட்டி வஜீரா பிள்ளையார் கோவில் வளாகத்தில், குறுகிய காலத்தில் ஒரு சீரடி சாயி பாபாவின் ஆலயத்தை நிறுவி, கொழும்பு வாழ் சாயி பக்தர்களுக்கு, அவர் வழங்கிய இந்த சாயி சேவை, எப்போதும் சாயிபக்தர்களின் மனதில் நிலைத்துநிற்கும்.

இவரது ஆத்மா, சாயி பரமாத்மாவுடன் ஒருமித்து சங்கமித்துள்ளது. ஆகவே சாயி பக்தராகிய நாம் அனைவரும் அவரது ஆத்மா பூரண சாந்தியடைய பிராத்திப்போமாக!

**எஸ். என். உதயநாயகம்**
**தலைவர்,**
**பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா**
**மத்திய நிலையம்**
**கொழும்பு.**

# சலூன்களை மீளத் திறக்க அனுமதி

சிகை அலங்கரிப்பு நிலையங்கள், மற்றும்அழகுநிலையங்களை மீளத் திறக்க சுகாதார அமைச்சர் அனுமதியளித்துள்ளார்.

சுகாதார துறையினரால் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை உரிய வகையில் பின்பற்றப்பட வேண்டும், சுகாதார அமைச்சின் ஆலோசனையின் படி, முடி வெட்டுதல் உள்ளிட்ட மிக அத்தியாவசிய சேவைகளை மட்டுமே வழங்க வேண்டும் என்றும் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராய்ச்சி அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் மற்றும் அழகு நிலையங்களின் சேவைகள் தொடர்பில் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை ஊடாகக் கண்காணிக்கப்படும் என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அழகுத் துறையினருடன் கலந்துரையாடியபோது துறை வல்லுநர்கள்கோரியதற்குஇணங்க, சிகை அலங்கரிப்பு நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் நிலையங்களிற்கு வருகை தருபவர்களுக்கு, குறிப்பாக சமூக இடைவெளி, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சேவைகளை வழங்கவேண்டும் என்றும் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராய்ச்சி அறிவுறுத்தியுள்ளார்.

# சமுர்த்திப் பயனாளிகளுக்கு இந்த வாரம் கொடுப்பனவு

கிளிநொச்சி, மே. 05

சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் உள்ளோர் முதியோர், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டவர்களுக்கான அரசினால் வழங்கப்படும் விசேட கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

கிளிநொச்சியில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் இதனை கூறினார்.

அதன் பிரகாரம் அரசினால் வழங்கப்படும் விசேட கொடுப்பனவான 5000 ரூபா இவ்வாரத்திற்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

# மத்திய மாகாணத்தில் 42 பேருக்குத் தொற்று

மத்திய மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும், இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான 42 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் என்று, மத்திய மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அர்ஜுன திலகரத்ன தெரிவித்தார்.

கண்டி மாவட்டத்தில் 31 பேரும் மாத்தளை மாவட்டத்தில் 7 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் மூவருமே இவ்வாறு இனங்காணப்பட்டுள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் இனங்காணப்பட்ட 31 பேரில், 21 பேர் கடற்படை வீரர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் கண்டி மாவட்டத்தில், அக்குறணைக்கு அடுத்ததாக, நாவலப்பிட்டி பிரதேசத்திலேயே அதிக தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் நாவலப்பிட்டியில் இதுவரை, ஐவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

# கணவனை அடித்து கொன்றுவிட்டு பொலிஸில் சரணடைந்த மனைவி!

*கொழும்பு, மே. 05*

*மதுபோதையில் தினமும் துன்புறுத்திய கணவனை பொல்லால் அடித்து கொன்றுவிட்டு, மனைவி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.*

*ஹாலி எல, டெபதேவட்ட பகுதியில் இன்று காலை இந்தச் சம்பவம் நடந்தது. 36 வயதுடைய பெண்ணொருவரே பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.*

*தினமும் மதுபோதையில் வரும் கணவன், மனைவியை துன்புறுத்தி வந்துள்ளார். கொடுமையை பொறுக்க முடியாத கட்டத்தில், கணவனை இன்று காலை கட்டையால் அடித்துக் கொன்றுள்ளார்.*

*பின்னர் ஹாலி எல பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.*

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு
விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை – ரூபாய் 500/-
முழு வர்ணம் – ரூபாய் 1000/-
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

**தோட்டக்காணி தேவை**
மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை.
இரசாயண உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது.
உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில் நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 078 284 5000




**வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு**
வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 411 4422

**வேலைவாய்ப்பு – இரவுக் காவலாளி**
யாழ். நகரப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு இரவுக்காவலாளி ஒருவர் தேவை.
முழுநேரமாக தங்கிநின்று வேலைசெய்தால் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 307 8799

**புழுக்கொடியல் விற்பனைக்கு.**
சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு.
தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)
தொடர்புகளுக்கு: 076 100 5277

# ரெலோத் தலைவரின் நினைவேந்தல் நிகழ்வு

'ரெலோ' இயக்கத்தின் தலைவர் சுந்தரம் சிறீ சபாரத்தினத்தின் 34 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று பிற்பகல் 2.30 மணி அளவில் சிறி ரெலோ இயக்கத்தின் யாழ் மாவட்ட அமைப்பாளர் சி. சிவகரன் தலைமையில் இடம்பெற்றது.

சிறீ சபாரத்தினம் சுட்டுக் கொல்லப்பட்ட கோண்டாவில் அன்னங்கை தோட்ட வெளியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறீ ரெலோவின் முன்னாள் யாழ் மாவட்ட அமைப்பாளர் எஸ். செந்தூரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தற்போதைய கொரோனாத் தொற்று நெருக்கடியை ஒட்டி, சுருக்கமாக, அமைதியாக, ஆளணியின்றி இந்த நினைவு அனுஷ்டானம் மேற்கொள்ளப்படதாகக் கூறப்பட்டது.





# அசாதாரண சூழ்நிலையிலிருந்து விடுபட்டிருக்கின்றது கிளிநொச்சி

அசாதாரண சூழ்நிலையிலிருந்து கிளிநொச்சி விடுபட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் கொரோனா நிலைவரம் தொடர்பில் இன்றைய தினம் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இந்த தகவலை குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது பேசிய அவர் –

அசாதாரண சூழ்நிலையிலிருந்து கிளிநொச்சி விடுபட்ட நிலையில் காணப்படுகிறது. மக்கள் சுகாதார நடைமுறையை பின்பற்ற ஒழுங்குகள் முறையாகச் செய்யப்பட்டுள்ளன.

ஓய்வூதியர், முதியோர், சிறுநீரக நோயாளர்களுக்கான மே மாதக் கொடுப்பனவு வெசாக்கை முன்னிட்டு வழங்கப்படவுள்ளது.

மாவட்டத்தின் உணவுப் பாதுகாப்பை மேற்கொள்ளும் பொருட்டு சௌபாக்கியா வேலைத்திட்டத்தின் கீழ் 14 விதமான பயிர்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

நெல், மிளகாய், பெரிய வெங்காயம், கௌபி, பயறு, சோளம் போன்ற பயிர்கள் செய்யப்படவுள்ளன.

வனவளத் திணைக்களம் கையகப்படுத்தியுள்ள ஆனைவிழுந்தான் குளம், ஜெயபுரம் ஆகிய கிராமங்களின் காணி தொடர்பாக, வடக்கு ஆளுநரிடம் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு குழு ஒன்று சென்றுள்ளது.

உணவுப் பொருள்கள் உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் இரண்டாம் கட்டமாக வழங்கப்பட்டுள்ளது.

தற்போது கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மானிய விலையில் பொருள்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஒரு மாதம் வீட்டில் அவஸ்தைப்பட்ட பின்பு நேற்று ஆஸ்பத்திரி சென்றவர் இன்று சாவு

## 9 ஆவது கொரரொனா மரணம் குறித்துத் தகவல்

இலங்கையில் கொரோனா தொற்றினால் 9வது மரணம் இன்று நிகழ்ந்து.

கொழும்பு, மோதர பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பொன்றில் வசித்து வந்த 52 வயதான பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார்.

நேற்று இலங்கையில 8 ஆவது கொரோனா உயிரிழப்பு பதிவானது. அவரும் ஒரு பெண்ணாவார். இன்று 9 ஆவது மரணமும் பெண். இன்று மோதரையிலிருந்து மேலுமொரு பெண் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இன்று உயிரிழந்த பெண், நேற்று இரவுதான் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஒரு மாதமாக அவர் நோய் வாய்ப்பட்டிருந்துள்ளார். கடுமையான சுவாசப் பாதிப்பு அவருக்கு இருந்தது. எனினும், அவர் சிகிச்சைக்கு செல்லவில்லை. வீட்டிலேயே இருந்துள்ளார்.

ஒரு மாத அவஸ்தைக்கு பின்னர், நேற்று அவரது நிலைமை மோசமடைந்ததை தொடர்ந்து, நேற்றிரவு கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு நடந்த பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று உறுதியானதையடுத்து, இன்று அதிகாலை 1 மணியவில் ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

எனினும், இன்று நண்பகல் 12.50 மணியளவில் அவர் உயிரிழந்துள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.05.2020 இல் வெளியிடப்பெற்றது.